தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2023

**17 வயதுப்பிரிவு**

(01.01.2006 – 31.12.2007 வரையில் பிறந்தோர்)

## பிரிகேடியர் பால்ராஜ் மாமா

பிரிகேடியர் பால்ராஜ்! தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீக்கமறக் கலந்த ஒரு காலத்தின் பதிவு! தமிழீழத் தேசியத் தலைவர் வளர்த்தெடுத்த சமர்க்கள நாயகன்! அஞ்சா நெஞ்சன்! தமிழீழ மண்ணின் விடுதலையை மட்டுமே மூச்சாக்கிய பெருவீரன்! பால்ராஜ் என்றால் பெயரல்ல, போராயுதம்! எதிரிப்படையை நிலைகுலையச் செய்த ஓர்மம்! தலைவர் மாமாவால் இவரிடம் ஒரு தாக்குதல் திட்டம் கொடுக்கப்பட்டால், அன்றிலிருந்து ஊண் உறக்கமின்றி வேவுப்பணி முதல் பின்னரங்கப் பணிகள் வரை அனைத்திலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து உழைப்பதும் அனைத்துச் செயற்பாடுகளையும் உறுதிப்படுத்துவதும் இவருக்கே உரிய தனிப்பண்பு.

களத்தில் நின்று போராளிகளுடன் ஒரு போராளியாகச் சண்டையிட்டபடி, போர்க்களத்தை வழிநடத்துவது அவரது போரியல் உத்தி. “போராளிகளின் நெஞ்சுரமும் எங்கள் மக்களின் ஆதரவுமே எமது விடுதலைப் போராட்டம் பல நெருப்பாறுகளைக் கடக்கும் உறுதியைத் தந்தன” என்று தலைவர் மாமா கூறுவதற்கு எடுத்துக்காட்டானவர் பால்ராஜ் மாமா. ‘வெற்றியைத் தவிர வேறெதற்கும் இடமில்லாத சண்டைக் களங்களை வழிநடத்த ஒரு தளபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழல் இருந்தால், தலைவர் மாமாவின் தேர்வாக எப்போதும் பால்ராஜ் மாமாவே இருப்பார்’ என்பது அவரோடு களமாடிய தளபதிகளின் பதிவு.

ஈழத்தில் நிலைகொண்டிருந்த இந்தியப் படைகளுடனான சண்டைகளில் மேஜர் பசீலன் மாமாவும் பால்ராஜ் மாமாவும் இணைந்து நடாத்திய எதிர்ச் சமர்களை இந்தியப் படை ஒருபோதும் மறக்காது. தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய படைத்தள அழிப்பான மாங்குளம் படைமுகாம் அழிப்பு முதல் ஆனையிறவுப் படைத்தள அழிப்புக்கு வித்திட்ட இத்தாவில் பெட்டிச் சண்டை வரை பால்ராஜ் மாமாவின் வீரமிகு போராற்றலும் வழிநடத்தலும் வரலாற்றில் நிலைபெற்றவை.

ஐரோப்பியர் காலத்திலிருந்தே ஆனையிறவுப் படைத்தளம் எதிரியின் தற்காப்பிடமாக நிலைபெறத்தொடங்கியது. இதனைக் கைப்பற்ற வேண்டிய தேவையை உணர்ந்த தலைவர் மாமா, அதனை நேரடியாகத் தாக்காமல் கைப்பற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டினார். அதற்காகக் கடல் வழியாகச் சென்று, குடாரப்பில் தரையிறங்கி, சதுப்பு நிலங்களுக்குள் நடந்து இத்தாவிலில் பெட்டி வடிவில் வீரர்களை நிறுத்தி, நிலையெடுத்தார் பால்ராஜ் மாமா. எதிரியின் நெற்றிப்பொட்டில் கூடாரம் அமைத்துக் குடிபுகுவது போன்ற துணிகரச் செயல் அது. 34 நாள்கள் நடந்த பெருஞ்சமரின் பின் ஆனையிறவுப் பெருந்தளம் விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டது. இது தமிழீழ விடுதலைப் புலிகளின் போராற்றலையும் போரியல் உத்திகளையும் எதிரிகளை மட்டுமன்றி உலக நாடுகளையும் வியக்க வைத்து, ஆய்வுகளை மேற்கொண்டு, தங்கள் போரியல் கற்கையாக அமைக்கச் செய்தது.

காலம் தந்த வீரத்தளபதியாக, தலைவர் மாமா வளர்த்தெடுத்த சமர்க்கள நாயகனாக வலம் வந்த பால்ராஜ் மாமா 2008 மே 5 ஆம் நாள் சாவைத் தழுவிக்கொண்டார். பெருந்தளபதியை இழந்து நின்றது தமிழீழ தேசம். அவரது போராற்றல் தமிழ்த் தலைமுறைகளுக்கு வழிகாட்டும் வல்லமை மிக்கது. தமிழீழ தேசம் எமதாகும்போது, வரலாற்றுப் பாடத்தில் சமர்க்களங்களின் சரித்திர நாயகன் பிரிகேடியர் பால்ராஜ் பாடப் பகுதியாகி எம்மை வழிநடத்துவார்.

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”